பக்கங்கள் 13+2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 15 வெள்ளிக்கிழமை 01.11.2024 | அதிர்வு 92

## துயிலும் இல்லங்களில் சிரமதானம் ஆரம்பம்



(மேலதிக படங்கள் 3 ஆம் பக்கத்தில்)

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# பதுளை பஸ் விபத்தில் 3 மாணவிகள் மரணம்!

## 6 பேர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில்

( ராமு தனராஜா )

பதுளை, மஹியங்கனை வீதி 4 ஆவது மைல் கல் பகுதியில் பஸ் ஒன்று வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பல்கலைக்கழக மாணவிகள் மூவர் உயிரிழந்துள்ளனர் எனவும், 35 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் 02 ▶

# வரலாற்றையே மாற்றும் இனத்துரோகிகளிடத்தே விழிப்பாக இருங்கள்!

## தமிழரசின் முன்னாள் எம்.பி. சிறீதரன் எச்சரிக்கை



(எஸ்.நிதர்ஷன்)

“ஈழத்தமிழர்களின் வரலாற்றை மாற்றும் முயற்சியில் இனத்துரோகிகள் சிலர் ஈடுபட்டு வருகின்றார்கள். அத்தகையவர்களின் கருத்துத் திணிப்புகள் தொடர்பில் இளைய தலைமுறையினர் அவதானமாக இருக்க வேண்டும்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். 02 ▶

# 34 வருடங்களாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த வீதி விடுவிப்பு





(பிரபாகரன் டிலக்சன், ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் கடந்த 34 வருடங்களாக இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த வயாவிளான் சந்தி – தோலகட்டி சந்தி வரையிலான வீதி இன்று வெள்ளிக்கிழமை முதல் மக்கள் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.

பலாலி வீதியில், வயாவிளான் மத்திய கல்லூரியில் இருந்து வயாவிளான் 04 ▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பதுளை பஸ்...**

பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, காயமடைந்தவர்களில் 6 பேர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்தில் உள்ள மாணவர்கள் மஹியங்கனைப் பக்கமாக சுற்றுலா சென்றபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து இடம்பெறும்போது பஸ்ஸில் 36 மாணவர்களும், 2 விரிவுரையாளர்களும், 2 இராணுவ அதிகாரிகளும். சாரதியும் என 41 பேர் இருந்துள்ளனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

காயமடைந்த 35 பேர் பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவோரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







**வரலாற்றையே...**

கிளிநொச்சி – வட்டக்கச்சி வட்டாரத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:–

“எமது இனத்தின் இருப்புக்கான அடிப்படைக் கட்டமைப்புகள் அத்தனையையும் நீண்ட கால நோக்கோடும், நிபுணத்துவ ஆற்றலோடும் நிறுவிய தமிழீழ விடுதலைப் புலிகளின் சிந்தனையிலும் செயல் நோக்கிலும் உருவாக்கம் பெற்றதுதான் அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகம்.

ஆனால், அதன் உருவாக்கத்தில் ஒரு துரும்பைத்தானும் அசைத்திராத, வடக்கிலுள்ள முன்னாள் அமைச்சர் ஒருவர், அத்தகைய வரலாற்றுப் பெரும் பணிக்குத் தற்போது உரிமை கோரி வருகின்றார். எங்களது வரலாறுகளை மறைத்தும் திரித்தும் வரும் இத்தகைய இனத்துரோகிகள் தொடர்பில் எமது மக்களும், இளைய தலைமுறையினரும் விழிப்பாக இருக்க வேண்டும்.” – என்றார்.

# துயிலும் இல்லங்களில் சிரமதானம் ஆரம்பம்



**(எஸ்.நிதர்ஷன்)**

வரும் 27ஆம் திகதி மாவீரர் நாள் நடைபெறவுள்ள நிலையில் இம்மாதத்தின் ஆரம்பத்தில் இருந்து துயிலும் இல்லங்களைத் துப்புரவு செய்யும் பணிகளைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஆரம்பித்துள்ளனர். இதன் முதற்கட்டமாக இன்று கோப்பாய் துயிலும் இல்லம் முன்பாக துப்பரவுப் பணி இடம்பெற்றது.














### 34 வருடங்களாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தி வரையிலும், அதிலிருந்து அச்சுவேலி வீதியில் தோலகட்டி வரையிலுமான சுமார் 1.250 கிலோமீற்றர் வீதி மக்கள் போக்குவரத்துக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த குறித்த பகுதி வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனின் அனுமதிக்கமைய மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியில் காணப்பட்ட வீதித்தடைகள் இன்று காலை முதல் இராணுவத்தினரால் விலக்கப்பட்டன.



















# கல்முனை மாநகர சபை தொடர்பில் நீதிக்கான மய்யம் நடவடிக்கை!

## வினைத்திறனற்ற சேவை தொடர்பில் அதிருப்தி

(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர சபை பொது மக்களுக்கு சேவை வழங்குவதில் வினைத்திறனற்றதாகக் காணப்படுவது கவலையளிக்கிறது என்று நீதிக்கான மய்யத்தின் தலைவர் சட்டமுதுமானி ஷஃபி. எச். இஸ்மாயில் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபைக்கு எதிராக நீதிக்கான மய்யம் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் மேற்கொண்ட விடயம் தொடர்பிலான விசேட செய்தியாளர் சந்திப்பு அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியில் உள்ள அதன் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தனது ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கல்முனை மாநகர சபைக்கு எதிராக நீதிக்கான மய்யம் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது. அதில் பிரதானமாக குடிதண்ணீர் இணைப்புக்காகத் தோண்டப்படும் வீதியைச் செப்பனிடும் நிதிக்கு என்ன நடந்தது என்ற விடயத்தை தெளிவுபடுத்துவதற்காக எம்மால் இவ்வழக்கு மேல் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டது.

இதன் மூலம் இம்மனித உரிமை மீறல் வழக்கில் மக்களுக்கான ஒரு நீதியை பெற்றுக்கொடுப்பதே நோக்கமாகும்.

கல்முனை மாநகர சபை பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் புதிய நீர் இணைப்புக்காக மாநகர சபையின் அனுமதி பெற்று தோண்டப்படுகின்ற கொங்கிரீட் உள்ளிட்ட இதர வீதிகள் இன்னும் செப்பனிடப்படாததால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாகி வருகின்றன.

இவ்விடயத்தை எமது மய்யம் சுட்டிக்காட்டி நடவடிக்கை எடுக்குமாறு கல்முனை மாநகர சபை ஆணையாளருக்குக் கோரிக்கை கடிதம் ஒன்றினை கடந்த காலங்களில் அனுப்பி வைத்திருந்தது.

இதற்கு கல்முனை மாநகர சபை நிர்வாகத்தினரால் பொறுப்பற்ற வகையில் கண்துடைப்பான பதில் எமக்கு வழங்கப்பட்டது. இதனை எமது மய்யம் ஏற்றுக் கொள்ளாததால், மாநகர சபைக்கு எதிராக இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளோம்.

புதிய நீர் மின் இணைப்பை பெறும் விண்ணப்பதாரர்கள் கல்முனை மாநகர சபைக்கு ஏற்கனவே புதிய நீர் இணைப்புக்காக தோண்டப்படும் வீதியைச் செப்பனிடுவதற்கான கட்டணத்தை செலுத்திய பின்னரே நீர் இணைப்புக்காக அனுமதியை பெற்றுக்கொள்கின்றனர். ஆனால் கல்முனை மாநகர சபை ஆள்புல எல்லைக்குள் நீர் இணைப்பு வேலைகள் முடிவடைந்த பின்னரும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் தோண்டப்பட்ட வீதிகள் மாநகர சபையால் செப்பனிடப்படாமல் நெடுங்காலமாக காணப்படுகின்றன.

இது மாநகர சபை கட்டளை சட்டத்தினை மீறும் ஒரு செயற்பாடாகும். மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 46 மற்றும் 47 ஆவது பிரிவின்படி , வீதிகளை நிர்மாணிப்பதும் பராமரிப்பதும் மாநகர சபையின் அடிப்படைப் பொறுப்புகளாகும்.

இந்த அடிப்படை கடமைகளை நிறைவேற்றத் தவறுவது மாநகர சபையின் சேவைத் தன்மையை கடுமையான கேள்விக்கு உட்படுத்துகிறது. ஒரு குறிப்பிட்ட சேவையினை வழங்கவென நிதி அறவிடப்பட்டு பின்னர் சேவையை வழங்காதிருப்பது ஒரு நிதி மோசடியாகும். மக்களிடம் அறவிடப்பட்ட நிதிக்கு என்ன நடந்துள்ளது? என சந்தேகம் எழுகின்றது.- என்றார்.

அத்துடன் நீதிக்கான மய்யம் மாநகர சபை ஆணையாளருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில், தோண்டப்பட்ட வீதிகளைச் செப்பனிடும் பணியை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தது.

மாநகர சபை நடவடிக்கை எடுக்காது போனால் மாநகர சபைக்கு எதிராக ஒரு சட்ட நடவடிக்கை எடுப்போம் என்று அன்றே தெரிவித்திருந்தோம். மேலும் அரசு நிறுவனம் ஒன்றுக்கு மாகாண மேல் நீதிமன்றத்தில் மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதானது இதுவே வரலாற்றில் முதற்தடவையாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

செய்தியாளர் சந்திப்பில் மய்யத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி றியாத் ஏ.மஜீத், பிரதித் தலைவர் யூ.கே.எம். றின்சான் ஆகியோரும் இணைந்திருந்தனர்.

## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# மாலைதீவுடன் ஊடாட்டம்

சர்வதேச ராஜதந்திரத்தில் நாடுகளுக்கு இடையேயான ஊடாட்டங்களில் மிக முக்கியமான விடயம் எதிர்த் தரப்புகள் தங்களுக்குள் ஒன்றிணைந்து செயல்பட இடமளிக்காமல் பார்த்துக் கொள்வதாகும்.

எதிர்த்தரப்புகள் ஒன்றிணைவது தமது நலனுக்கும் பாதுகாப்புக்கும் ஆபத்தானது என்பதை எப்போதுமே நாடுகள் முன்னெச்சரிக்கை விடயமாக - கரிசனைக்குரிய விவகாரமாக - கருதிச் செயற்படுவது வழமை.

எதிர்த் தரப்புக்கள் ஒன்றிணையாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக நாடுகள் அடுத்துக் கெடுக்கும் தந்திரோபாயத்தைக் கூடப் பின்பற்றுவது வழமை.

இந்தப் பிராந்தியத்தின் உபகண்டமான இந்தியாவுக்கு அதன் அயல் தேசங்களில் ஏற்பட்டு வரும் ஆட்சி மாற்றங்கள் விருப்பத்திற்குரியனவாக இல்லை என்பது வெளிப்படையானது.

அதன் தரை வழி அயல் தேசங்கள் பெரும்பாலும் புதுடில்லியோடு முரண்படும் நிலைப்பாட்டைக் கொண்ட ஆட்சிப் பீடங்களின் கைகளுக்கு மாறி உள்ள நிலையில், கடல் வழி அயல் தேசமான இரண்டிலும் கூட நிலைமை அப்படித்தான் மாறி இருக்கின்றது.

மாலைதீவு ஏற்கனவே சீனச் சார்புப் போக்குடைய இடதுசாரிகளின் ஆட்சிக்குக் கை மாறிவிட்டது. 'மாலைதீவில் இருந்து இந்தியாவை வெளியேற்றுவோம்!' என்ற கோஷத்தோடு தேர்தலில் களம் இறங்கிய முகமது மொய்ஸ் அங்கு ஜனாதிபதியாகி விட்டார்.

அதேசமயம் இலங்கையிலும் சீனச் சார்பு இடதுசாரி போக்கு கொண்ட தேசிய மக்கள் சக்தி அதிகாரத்துக்கு வந்து விட்டது.

மாலைதீவிலும் இலங்கையிலும் புதிதாக அதிகாரத்துக்கு வந்த தரப்புகளோடு இணங்கிப் போகின்ற - அவற்றை அரவணைத்துச் செல்கின்ற - நிலைப்பாட்டை புதுடெல்லி எடுத்தாலும் கூட, அந்த நிர்வாகங்கள் இந்தியாவோடு இணைந்து - இயைந்து - நிற்குமா என்பது இன்னும் கேள்வி குறியாகவே - சந்தேகத்திற்கு உரியதாகவே - தொடர்கின்றது.

இந்தப் பின்புலத்தில் இந்தியாவுக்கு மாற்றான - இந்தியாவோடும் முரண்பட்டு நிற்கின்ற - சீனாவோடு இயைந்து சொல்லுகின்ற இந்தியாவின் இரண்டு கடல் வழி அயல் தேசங்களும் - இலங்கையும் மாலை தீவும் - தங்களுக்குள் இணைந்து செயல்படும் இணக்கத்திற்கான சந்திப்புக்களை இப்போது முன்னெடுக்கத் தயாராகி வருகின்றன.

அதன் ஒரு கட்டமாக மாலைதீவு ஜனாதிபதி முகமது மொய்ஸ் மிக விரைவில் இலங்கைக்கு வர இருக்கிறார் என்று செய்தி வெளியாகியிருக்கிறது.

இது தொடர்பில் இலங்கைக்கான மாலைதீவு தூதுவர் மசூர் இமான் இலங்கை ஜனாதிபதியின் செயலாளரை நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துப் பேசி இருக்கிறார்.

இருதரப்புகளும் உல்லாசப் பயணத்துறை, சுகாதாரத்துறை, கல்வித்துறை ஆகியவற்றில் இணைந்து செயல்படுவதற்கான திட்டங்கள் குறித்து ஆராய்ந்தன என்றும் கூறப்பட்டது.

இரு நாடுகளும் பல்வேறு கூட்டு முயற்சிகளில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகள் குறித்து இந்த சந்திப்புக்களில் ஆராயப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இரண்டு நாடுகளின் ஆட்சி தரப்புகளுக்கும் பின்புலமாக இருக்கும் சீனா இந்த சந்திப்புகள் பின்புலத்தில் எத்தகைய காய் நகர்த்தல்களை முன்னெடுக்கும் என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

மாலைதீவின் புதிய ஆட்சிப் பீடம் புதுடில்லியுடன் வெளிப்படையாக முரண்டு பிடித்து நின்றமையினால் இந்தியா மூலம் ஈட்டி வந்த உல்லாசப் பயணத்துறை வருமானத்தை மாலைதீவு பெருமளவில் இழந்து பொருளாதார ரீதியில் அல்லாடும் நிலைமைக்கு வந்திருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் வீழ்ந்து கிடக்கும் தனது உல்லாசப் பயண துறையைத் தூக்கி நிறுத்துவதற்கு இலங்கையோடு கூட்டிணைவிற்கு மாலைதீவு முயல்கின்றது என்பது வெளிப்படையானது.

எது, எப்படி என்றாலும் இலங்கை தன்னுடைய பொருளாதாரப் பின்னடைவிலிருந்து நிமிர்வதற்கு முக்கிய காரணமாக இருக்கின்ற உல்லாசப் பயணத் துறையில் கணிசமான பங்களிப்பை இந்தியா வழங்கி வருகின்றது என்பதை கொழும்பு மறந்து விடக்கூடாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியாவோடு உல்லாச பயணத் துறையில் வெளிப்படையாக முரண்டு பிடிக்கும் மாலைதீவுக்கு கொழும்பு முண்டு கொடுக்கப் போவது அத்துறையில் இலங்கைக்கு இந்தியா வழங்கி வரும் ஆதரவுக்கு பின்னடைவை ஏற்படுத்தலாம்.

மாலைதீவுடனான ஊடாட்டங்கள் - உறவாட்டங்களை புதுடில்லியின் பின்புலத்தோடு கொழும்பு நோக்குவதும் அணுகுவதும் முக்கியமானது என்பதை நேரத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.



# கல்முனை மாநகர சபையில் இடம்பெற்ற தபால் வாக்களிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்குகளை கல்முனை மாநகர சபை உத்தியோகத்தர்கள் இன்று வெள்ளிக்கிழமை (01) பதிவு செய்தனர்.

கல்முனை மாநகர சபையின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்ற இந்த வாக்களிப்பில் அத்தாட்சிப்படுத்தும் அலுவலராக உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம் கடமையாற்றினார்.

தபால் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பித்த 49 உத்தியோகத்தர்கள் இதன்போது தமது வாக்குகளை பதிவு செய்தனர்.

கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் உள்ள பெரும்பாலான அரச அலுவலகங்களில் நேற்று தபால் மூல வாக்களிப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# றோட்டரிக் கழக மாநாடு சுவிஸில்

(எம். எப். றிபாஸ்)

கொழும்பு வடக்கு றோட்டரக் தலைவராக செயற்பட்டு வரும் ஹனீக்கா ராகில், ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச றோட்டரிக் கழகமும் இணைந்து நடத்தும் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சுவிஸ்ஃக்குப் பயணமாகியுள்ளார்.

கிழக்கு மாகாணம் நிந்தவூரைச் சேர்ந்த இவர் பொதுநலவாய நாடுகளின் இளைஞர் விவகாரத் தலைவியாக பதவி வகிப்பதுடன் கடந்த காலங்களில் இந்தியா, துருக்கி, லண்டன், டுபாய் போன்ற நாடுகளில் நடைபெற்ற மாகாநாடுகளில கலந்து கொண்டமை விஷேட அம்சமாகும்.





# நீலப் பொருளாதாரம் என்ற எண்ணக்கரு இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு பாதிக்கும்...?

இலங்கை போன்ற தீவு நாடுகளுக்கு, கடல் என்பது வெறும் நீர்நிலை மட்டுமல்ல அது பொருளாதார வளர்ச்சிக்கான அபரிமிதமான வாய்ப்புகளைத் தரும் ஒரு சொத்து. இதனை உணர்ந்து, உலக நாடுகள் கடல்சார் வளங்களை நிலையான முறையில் பயன்படுத்தி பொருளாதாரத்தை வளர்ப்பதற்கான ஒரு புதிய அணுகுமுறையை நோக்கி நகர்ந்து வருகின்றன. இந்த அணுகுமுறைதான் 'நீலப் பொருளாதாரம்'.

**நீலப் பொருளாதாரம் என்றால் என்ன?**

நீலப் பொருளாதாரம் என்பது கடலின் அனைத்து வளங்களையும் நிலையான முறையில் பயன்படுத்தி பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கான ஒரு விரிவான கருத்தியல் ஆகும். இதில் கடல் உணவு, கடல்சார் போக்குவரத்து, கடலின் உயிரின பன்வகைமை, கடலடி கனிமங்கள், கடல்சார் சுற்றுலா, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற பல்வேறு துறைகள் அடங்கும்.

இலங்கைக்கு நீலப் பொருளாதாரம் ஏன் முக்கியம்?

பொருளாதார வளர்ச்சி : கடல்சார் துறையில் முதலீடு செய்வதன் மூலம், இலங்கை புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி, ஏற்றுமதியை அதிகரித்து, பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்த முடியும்.

உணவு பாதுகாப்பு : கடல் உணவு இலங்கையின் உணவு பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது. நீலப் பொருளாதாரம் மூலம் மீன்பிடித் துறையை மேம்படுத்தி, உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்யவும், ஏற்றுமதி செய்யவும் முடியும்.

சுற்றுலா : இலங்கையின் கடற்கரைகள் உலகளவில் பிரபலமானவை. நீலப் பொருளாதாரம் மூலம் சுற்றுலாத் துறையை மேம்படுத்தி, வெளிநாட்டு வருவாயை அதிகரிக்க முடியும்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி : கடலில் இருந்து காற்று மற்றும் அலைகள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம், இலங்கையின் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்யவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் முடியும்.

**நீலப் பொருளாதாரம் இலங்கையின் பொருளாதா ரத்தை எவ்வாறு பாதிக்கும்?**

நேரடி வேலைவாய்ப்புகள்: மீன்பிடி, கடல்சார் போக்குவரத்து, கடல்சார் சுற்றுலா போன்ற துறைகளில் நேரடி வேலைவாய்ப்புகள் உருவாகும்.

மறைமுக வேலைவாய்ப்புகள்: கடல்சார் உள்கட்டமைப்பு, மீன்பிடி கப்பல்கள் கட்டுதல், சுற்றுலா உள்கட்டமைப்பு போன்ற துறைகளில் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும்.

ஏற்றுமதி அதிகரிப்பு: கடல் உணவு, கடல்சார் பொருள்கள் போன்றவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம், வெளிநாட்டு வருவாய் அதிகரிக்கும்.

உள்நாட்டு வருவாய் : சுற்றுலாத்துறை வளர்ச்சியின் மூலம் உள்நாட்டு வருவாய் அதிகரிக்கும்.

தொழில்நுட்ப வளர்ச்சி : கடல்சார் தொழில்நுட்பத்தில் முதலீடு செய்வதன் மூலம், தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்படும்.

**சவால்கள் மற்றும் தீர்வுகள்**

நீலப் பொருளாதாரத்தை செயல்படுத்துவதில் சில சவால்கள் உள்ளன. அவற்றில் முக்கியமானவை, சட்ட மற்றும் கொள்கை சட்டக்கட்டல்கள்: கடல்சார் வளங்களை பாதுகாத்து, நிலையான வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் சட்ட மற்றும் கொள்கை சட்டக்கட்டல்களை உருவாக்குதல் அவசியம்.

தொழில்நுட்பம்: நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கடல்சார் வளங்களை மேலாண்மை செய்ய வேண்டும்.

திறன் மேம்பாடு: கடல்சார் துறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குத் தேவையான திறன்களை மேம்படுத்துதல் அவசியம்.

நீலப் பொருளாதாரம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு புதிய வழியைத் திறந்து வைத்துள்ளது. ஆனால், இந்த வாய்ப்பை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள, அரசு, தனியார் துறை மற்றும் சமூகத்தின் ஒத்துழைப்பு அவசியம். நிலையான வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் கடல்சார் வளங்களை பாதுகாத்து, பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**கலாநிதி. ஏ. எல். முஹம்மது அஸ்லம்,**
**இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்,**
**பிரதேச செயலகம், சம்மாந்துறை.**





# பெரும்போக ஆரம்பக் கூட்டம்

**(வி.ரி.சகாதேவராஜா)**

திருக்கோவில் பிரதேசத்திலுள்ள கஞ்சிகுடியாறு, ரூபஸ் குள பாய்ச்சலுகு உட்பட்ட காணிகளுக்கான பெரும்போக பயிர் செய்கைக்கான ஆரம்பக் கூட்டம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த ஆரம்ப கூட்டத்தில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன், உதவி பிரதேச செயலாளர் திருமதி எஸ்.நிருபா, தம்பிலுவில் நீர்ப்பாசன அலுவலக பொறியாளர் ரி.ராஜேஷ்கண்ணா, கால்நடை வைத்திய அதிகாரி வைத்தியர் யூ.கதீஸ்வரன், தம்பிலுவில் கமநல சேவை பொறுப்பு உத்தியோகத்தர் எம்.அஜந்தன், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.கந்தசாமி மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புக்கள் , கால்நடைப் பண்ணையாளர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர். இதன்போது எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விதைப்பு மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.



# மேலைத்தேய வாத்திய இசைக்குழு போட்டியில் கல்முனை சாதனை !

(மாளிகைக்காடு)

கிழக்கின் அம்பாறை மாவட்டத்தின் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியானது 125 ஆவது ஆண்டு நிறைவுவிழாவைக்கொண்டாடிக்கொண்டிருக்கும் இத்தருணத்தில் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் வெற்றிகள் பலவற்றை குவித்து வருகிறது.

அதன் தொடர்ச்சியாக கடந்த செவ்வாய்க்கிழமை கல்முனை வலய மட்டத்தில் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆண் மற்றும் பெண் மாணவ மேலைத்தேய வாத்திய இசைக்குழு போட்டியில் கல்முனை கல்வி வலய கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களை பெற்று சாதனை படைத்துள்ளது.

இப்போட்டியானது கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் சிறப்பாக ஒழுகுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பலத்த போட்டிகளின் மத்தியில் இதில் பங்குபற்றிய ஆண் மாணவ மேலைத்தேய இசை குழுவானது முதலாம் இடத்தையும், பெண் மாணவ மேலைத்தேய இசை குழுவானது இரன்டாமிடத்தையும் பெற்றுக் கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளது.

இந்த மாணவர்களை ஊக்குவித்த அதிபர் அருட்சகோதரர் எஸ்.ஈ. றெஜினோல்ட், பெண் மாணவிகளின் மேலைத்தேய இசை குழுவுக்கு பொறுப்பாகவும் வழிகாட்டியாகவும் உள்ள பிரதி அதிபர் அருட்சகோதரி எம். பிரியசாந்தி, பொறுப்பாசிரியரான திருமதி எஸ். சுரேஷ், ஆண் மாணவர்களின் மேலைத்தேய வாத்திய இசை குழுவுக்கு பொறுப்பாக உள்ள அருட்சகோதரர் ஏ. தேவராஜா, பயிற்றுவிப்பாளரான எஸ். நிர்மல்ராஜா ஆகியோருக்கு பாடசாலை சமூகம் வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துள்ளது.

இப்போட்டியின் மூன்றாம் இடத்தை கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயம் தனதாக்கி கொண்டது.





EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME

(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA

# கந்தசஷ்டி விரதம் நாளை ஆரம்பம்!

(வி.ரி. சகாதேவராஜா)

இந்துக்களின் கந்த சஷ்டி விரதம் நாளை (02) சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

தொடர்ந்து ஆறு நாள்கள் விரதம் அனுஷ்டிக்கப்பட்டு ஆறாம் நாளாகிய 07 ஆம் திகதி வியாழக்கிழமை சூரசம்ஹாரம் இடம் பெறும்.

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் கந்த சஷ்டி விரதம் வழமைபோல் நாளை (02) சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

ஆலயத்தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தலைமையில், ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் மற்றும் ஆலயகுரு சிவசிறி அங்குசநாதக்குருக்கள் முன்னிலையில் விரதம் அனுஷடானங்கள் இடம்பெறும் கந்தசஷ்டி விரதம் 07 ஆம் திகதி சூர சம்ஹாரத்துடன் நிறைவு பெறுகின்றது.



இவ்வருடம் கந்தசஷ்டி விரதத்துக்கான சஷ்டித்திதி 06 ஆம் திகதி புதன்கிழமை முன்னிரவு 10.18 மணிக்குக் கூடி மறுநாள் 07 ஆம் திகதி வியாழக்கிழமை முன்னிரவு 9.35 மணிக்கு கலைகிறது என்று பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் தெரிவித்தார்.

ஆகவே விரதாதிகள் அதற்கேற்ப நடந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார்.

மறுநாள் 8 ஆம் தேதி வெள்ளிக்கிழமை திருக்கல்யாணம் நிகழ்வுடன் விரத உற்சவம் நிறைவுபெறும் என்று ஆலய பரிபாலன சபையின் செயலாளர் அ.செல்வராஜா தெரிவித்தார்.

# வலுவனதொரு எதிர்க்கட்சியாக புதிய ஜனநாயக கட்சி அமையும்!

## சிலிண்டர் வேட்பாளர் ஆதம்லெப்பை தெரிவிப்பு

(எம். எப். றிபாஸ்)

அமையவிரிக்கும் புதிய நாடாளுமன்றத்தில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுகின்ற புதிய ஜனநாயக கட்சி அதிகமான ஆசனங்களை பெற்று வலுவான ஒரு எதிர்க்கட்சியாக அமையும் என்பதில் ஐயமில்லை என திகாமடுல்ல மாவட்ட நான்காம் இலக்க வேட்பாளர் யூ.கே. ஆதம்லெப்பை தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் நேற்று(31) நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

தொடர்ந்தும் அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த நாடு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த போது தனது அனுபவத்தாலும், சமயோசித செயற்பாடுகளாலும் ஆக்க பூர்வமான முயற்சிகளைச் செய்து ஒரு ஸ்திரமான நிலைக்கு இட்டுச் சென்றார் என்பதை இந்த நாட்டு மக்கள் அறிவர்.

ஒரு இக்கட்டான காலகட்டத்தில் இந்த நாட்டைப் பொறுப்பெடுத்து இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி



எழுப்பியது மட்டுமல்லாமல் நாட்டு மக்களின் பசியை போக்கி அவசிய தேவைகளுக்காக மக்கள் வரிசையில் நின்ற அந்த அவல நிலையையும் இல்லாமலாக்கி எதிர்மறையாக இருந்த பொருளாதார வளர்ச்சி வீதத்தை நேரான பொருளாதார வளர்ச்சி வீதத்துக்கு கொண்டு சென்ற மிக முக்கியமான பணியை அவர் செய்திருந்தார். இந்தப் பணி இந்த நாட்டு மக்கள் இன்று நிம்மதியாக வாழ்வதற்கு வழி வகுத்தது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

எனவே வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருந்த நாட்டை எழுச்சியை நோக்கி நகர்த்திச் சென்ற முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான புதிய ஜனநாயக கட்சியை ஆதரித்து அவர் சார்பாக திகாமடுல்ல மாவட்டத்தில் நான்காம் இலக்கத்தில் போட்டியிடும் என்னையும் ஆதரிப்பதன் மூலம் இந்த நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கும், பலமான எதிர்க்கட்சி ஒன்று அமைவதற்கும் மக்களாகிய நீங்கள் ஆதரவு வழங்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

திகாமடுல்ல மாவட்டத்தில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுகின்ற எங்களது கட்சிக்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவு நாளுக்கு நாள் பெருகி வருகின்ற நிலையை நாங்கள் செல்கின்ற இடங்களில் எல்லாம் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

இதன் அடிப்படையில் இக்கட்சி மாவட்டத்தில் 3 ஆசனங்களை பெறக் கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது.

இந்த வெற்றி வாய்ப்புக்கு நீங்களும் பங்காளிகளாகும் வகையில் உங்கள் பெறுமதியான வாக்குகளை எனக்கு அளித்து நேர்மையான அரசியலுக்கு அதிகாரத்தை தோற்றுவிக்க பங்களிப்பு செய்யுமாறு வாக்காளர்களை கேட்டுக் கொள்கிறேன்.– என்றார்.







# வாசிப்பு மாதப் பரிசளிப்பு விழா!

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட உரும்பிராய் பொது நூலகத்தால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளின் பரிசளிப்பு விழா அண்மையில் உரும்பிராய் கற்பக விநாயகர் மணிமண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் இரத்தினகுமார் குபேசன் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினார்.








# தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டம்!

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் இளைஞர்கள் மற்றும் நலன்விரும்பிகளுக்காக ஒலுவில் தேசிய மக்கள் சக்தியின் பிரதான அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

நிகழ்வில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தின் பொத்துவில் தொகுதி 03 ஆம் இலக்க வேட்பாளர் ரமீஸ் மொகிடீன் மற்றும் 07 ஆம் இலக்க வேட்பாளர் சுல்தான் சத்தார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேசிய மக்கள் சக்தியின் முக்கிய செயற்பாட்டாளர்களும் கலந்து உரையாற்றினர்.



# புதிதாக உருவாகும் நகர்ப்புற நக்சல்கள் அடையாளம் காணப்பட வேண்டும்

## பிரதமர் மோடி தெரிவிப்பு



"நகர்புற நக்சல்களின் புதிய மாதிரி உருவாகி வருகிறது, அந்த சக்திகளை அடையாளம் காண வேண்டும். இந்தியாவுக்கு உள்ளேயும் வெளியேயும் சில சக்திகள் நாட்டை சீர்குலைத்து, அராஜகத்தைப் பரப்பி, உலகில் இந்தியா பற்றிய எதிர்மறையான எண்ணத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றன."

– இவ்வாறு பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாளை முன்னிட்டு குஜராத் மாநிலம் நர்மதா மாவட்டத்தின் ஏக்தா நகரில் உள்ள ஒற்றுமை சிலை அருகே நடந்த கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றினார். அப்போது அவர்மேலும் கூறுகையில்,

"இந்தியாவுக்கு உள்ளேயும் வெளியேயும் சில சக்திகள் நாட்டை சீர்குலைத்து, அராஜகத்தை உருவாக்கி, உலகில் இந்தியா பற்றி எதிர்மறையான எண்ணங்களை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். சாதியின் பெயரால் அவர்கள் நாட்டைப் பிரிக்க முயல்கிறார்கள். அவர்கள் வளர்ந்த இந்தியாவுக்கு எதிரானவர்கள்.

காடுகளில் நக்சலிசம் முடிவுக்கு வரும் நிலையில், நகர்ப்புறங்களில் நக்சலிசத்தின் புதிய மாதிரி உருவாகி வருகிறது. ஒற்றுமையாக இருந்தால் பாதுகாப்பாக இருக்கலாம் என்று கூறுபவர்களைக்கூட இன்று நகர்புற நக்சல்கள் குறிவைக்கிறார்கள். நாம் நகர்புற நக்சல்களை அடையாளம் கண்டு அவர்களின் முகத்திரையைக் கிழிக்க வேண்டும்.

இந்தியாவின் ஒருங்கிணைப்பில் சந்தேகம் கொண்ட பலர் இருந்த போதிலும், சர்தார் வல்லபபாய் படேல் அதைச் சாத்தியமாக்கினார். நாடு அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு பட்டேலின் 150 ஆவது பிறந்த நாளைக் கொண்டாட இருக்கிறது.

நமது நாடு அனைவருக்கும் பொதுவான சிவில் சட்டம் என்பதை நடைமுறைப்படுத்துவதை நோக்கி பயணிக்கிறது. அது நமது தேசத்தை வலிமைபடுத்தும். ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற திட்டத்தை செயல்படுத்த முயற்சித்து வருகிறோம். அது நமது ஜனநாயகத்தை வலிமைபடுத்தும்.

கடந்த 70 ஆண்டுகளில் முதல் முறையாக ஜம்மு காஷ்மீர் முதல்வர் ஒருவர் அரசமைப்பின் மீது பதவி பிரமாணம் செய்துள்ளார். நமது அரசின் முயற்சியால் கடந்த பத்து ஆண்டுகளில் நக்சலிசம் அதன் இறுதி மூச்சில் உள்ளது." – என்றார்.



# வெற்றிகரமாக மாநாடு நடத்திய விஜய்க்கு எனது வாழ்த்துகள்

## நடிகர் ரஜினிகாந்த் தெரிவிப்பு

தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியுள்ள விஜய்க்கு எனது வாழ்த்துகள் என்று நடிகர் ரஜினிகாந்த் தெரிவித்துள்ளார்.

தீபாவளியை முன்னிட்டு தனது போயாஸ் கார்டன் இல்லத்துக்கு முன்பு திரண்டிருந்த ரசிகர்களைச் சந்தித்த நடிகர் ரஜினிகாந்த், அவர்களுக்கு தீபாவளி வாழ்த்துகளை தெரிவித்தார். தீபாவளி, பொங்கல், புத்தாண்டு தினங்களில் நடிகர் ரஜினிகாந்துக்கு வாழ்த்துச் சொல்வதற்காக அவரது ரசிகர்கள், போயஸ் கார்டன் இல்லத்துக்கு செல்வது வழக்கம்.

அதன்படி தீபாவளி நாளான நேற்று ரஜினிக்கு வாழ்த்துச் சொல்ல அவரது வீட்டின் முன்பு ரசிகர்கள் கூடியிருந்தனர். காலையில் அவர்களைச் சந்தித்த ரஜினிகாந்த் ரசிகர்களுக்கு தீபாவளி வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்த ரஜினிகாந்த், "அனைவரும் மகிழ்ச்சியாகவும், சந்தோஷமாகவும் இருக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

அப்போது விஜய்யின் மாநாடு குறித்த செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்த அவர், "நிச்சயமாக நடிகர் விஜய் தமிழக வெற்றிக் கழக மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி இருக்கிறார். அவருக்கு எனது வாழ்த்துகள்" என்று தெரிவித்தார்.



# இந்தியா - சீனா படைகள் வாபஸ் பெறும் பணி நிறைவு

## தீபாவளி இனிப்பு பரிமாற்றம்

கிழக்கு லடாக் எல்லையின் தேப்சாங் மற்றும் டெம்சாக் பகுதியிலிருந்து இந்தியா– சீனா இராணுவ படைகள் வாபஸ் பெறும் பணி நிறைவடைந்துள்ளது. தீபாவளியை முன்னிட்டு, இந்திய இராணுவத்தினருக்கு, சீன இராணுவத்தினர் நேற்று இனிப்பு வழங்குகின்றனர்.

இந்தியா – சீன எல்லையில் உள்ள டோக்லாம் பள்ளத்தாக்கு பகுதியில் சீன ராணுவத்தினர் கடந்த 2017 ஆம் ஆண்டு சாலை அமைக்கும் பணியில் ஈடுபட்டனர். இதை இந்திய இராணுவத்தினர் தடுத்து நிறுத்தினர். அப்போது முதல் இரு தரப்பினர் இடையே மீண்டும் மோதல் தொடங்கியது. அதன்பின் கடந்த 2020 ஆ ம் ஆண்டு கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் இரு தரப்பினர் மோதிக் கொண்டதில், இந்திய வீரர்கள் 20 பேர் உயிரிழந்தனர். இச்சம்பம் இந்திய– சீன உறவில் விரிசலை ஏற்படுத்தியது.


இப்பிரச்சினையை தீர்க்க இராணுவ உயர் அதிகாரிகள், தூதரக அதிகாரிகள் தரப்பில் பல கட்ட பேச்சுவார்த்தைகள் கடந்த 4 ஆண்டுகளாக நடந்தன.

கிழக்கு லடாக் எல்லையின் தேப்சாங் மற்றும் டேம்சாக் பகுதியிலிருந்து இரு தரப்பு படையினர் வாபஸ் பெற்று ரோந்து பணி மேற்கொள்ள முடிவு செய்யப் பட்டதாக இந்தியா கடந்த 21-ம் தேதி அறிவித்தது. அதன்பின்பு ரஷ்யாவில் நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டில் சீன அதிபர் ஜின்பிங், பிரதமர் மோடி சந்தித்து இரு தரப்பு பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் இந்தியாவும், சீனாவும் பரஸ்பர நம்பிக்கை, பரஸ்பர மரியாதை, பரஸ்பர உணர்வுகளுக்கு மதிப்பளித்து செயல்பட வேண்டும் என்பதை பிரதமர் மோடி வலியுறுத்தினார்.

இதையடுத்து ஏற்கெனவே அறிவிக் கப்பட்டபடி இந்தியா சீனா இராணுவத்தினர் கிழக்கு லடாக் எல்லையின் தேப்சாங் மற்றும் டெம்சோக் பகுதியில் இருந்து வாபஸ் பெறும் பணியை நேற்று முன்தினம் நிறைவு செய்தனர். இங்கு அமைக்கப்பட்டிருந்த கூடாரங்கள் அகற்றப்பட்டன. இதை சரிபார்க்கும் பணியில் இந்திய இராணுவம் நேற்று முன்தினம் ஈடுபட்டது. இப்பகுதியில் இரு தரப்பு இராணுவத்தினரும் ரோந்து செல்லும் பணியை இம்மாதம் இறுதியில் மேற்கொள்கின்றனர். தீபாவளியை முன்னிட்டு இந்திய இராணுவத்தினருக்கு சீன இராணுவத்தினர் இன்று இனிப்பு களை பரிமாறிக்கொள்கின்றனர்.

இது குறித்து இந்தியாவுக்கான சீன தூதர் ஜூ ஃபெகாங் கொல்கத்தாவில் கருத்து தெரிவிக்கையில்,

“ரஷ்யாவில் கடந்த வாரம் நடந்த பிரிக்ஸ் உச்சி மாநாட்டுக்கு இடையே சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் பிரதமர் மோடி இடையே மிக முக்கியமான சந்திப்பு நடைபெற்றது. இரு தலைவர்களும் முக்கியமான புரிதலை எட்டியுள்ளனர். இரு நாடுகள் இடையே ஏற்படும் முன்னேற்றத்துக்கு, அந்த புரிதல்கள்தான் வழிகாட்டுதல்களாக இருக்கும். ஒருமனதான இந்த வழிகாட்டுதல்கள், நமது உறவுகளை எதிர்காலத்தில் சுமூகமாக்கி மேலும் முன்னேற்றும்” – என்றார்.



# பனிப்பொழிவு இல்லாது காணப்படும் பூஜி மலை!

ஜப்பானின் புகழ்பெற்ற பனிப் பொழிவு கொண்ட சுற்றுலா தளமான பூஜி எரிமலையின் உச்சியில் இதுவரை பனிப்பொழிவு இல்லாது காணப் படுகின்றது.

கடந்த 130 ஆண்டு கால கண் காணிப்பில் பனிப்பொழிவு இல்லாது பூஜி எரிமலை காணப்படுவது இது முதல் தடவையாகும்.

அத்துடன், புவி வெப்பமயமாதல் பற்றிய காலநிலை மாற்றத்தின் மற்றொரு எடுத்துக் காட்டாகவும் இது அமைகின்றது.

ஓய்ந்துள்ள பூஜி எரிமலை, பொதுவாக வருடாந்தம் ஒக்டோபர் தொடக்கத்தில் பனியைக் காணும்.எனினும் இந்த பருவத்தில் வழக்கத்திற்கு மாறாக வெப்பமான வானிலையால் பனிப்பொழிவை இன்னும் அது காணவில்லை என்று ஜப்பான் வானிலை நிறுவனம் தெரிவித்துள்ளது. இருப்பினும், அடுத்த வாரத்திற்குள் மலை உச்சியில் பனிப்பொழிவு ஏற்படும் என ஜப்பான் வானிலை நிறுவனம் தெரிவித்துள்ளது.

பக்கங்கள் 02

# கனடா முரசு

வெள்ளிக்கிழமை 01/11/2024

## இந்தியாவை சேர்ந்த இளம்பெண் மரணம்

**கொலை செய்யப்பட்டுள்ளாரென சந்தேகம்**

கனடாவில் உள்ள வால்மார்ட் நிறுவனத்தில் பணியாற்றி வந்த இந்தியாவை சேர்ந்த 19 வயதான குர்சிம்ரன் கவுர் என்ற இளம்பெண் கொலை செய்யப்பட்டுள்ள 02▶





# கனடாவில் சர்வதேச மாணவர்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தல்

**கனடாவில் சர்வதேச மாணவர்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுகின்றனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.**

**பிரம்டன் நகர நிர்வாகம், மத்திய அரசாங்கத்திடம் இந்த விடயம் தொடர்பில் சுட்டிக்காட்டியுள்ளது.**

**பிரம்டனில் சர்வதேச மாணவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாவதாகவும் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.**

சர்வதேச விமான நிலையம், பிரதான அதிவேக நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் பிரம்டனில் நகரில் காணப்படுகின்றன.

கனடாவில் அதிக எண்ணிக்கையிலான சர்வதேச மாணவர்கள் தங்கியிருக்கும் நகரமாக பிரம்டன் காணப்படுகின்றது என நகர மேயர் பெற்றிக் பிறவுண் தெரிவித்துள்ளார்.

சிலர் இணைய வழியில் சர்வதேச மாணவர்களை துஷ்பிரயோகம் செய்யும் வகையில் பதிவுகளை இடுகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

தங்குமிட வசதிகளை வழங்குவதற்கு பிரதியுபகாரமாக மாணவர்கள் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக நேரிடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் மத்திய அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.







# கனடா ஹாலோவீன் பண்டிகையில் இடம்பிடித்த இந்திய திரைப்படம்

நடிகை ஷ்ரத்தா கபூர் நடித்த ஸ்த்ரீ 2 என்னும் திரைப்படம், ஷாரூக்கானின் பதான் திரைப்படத்தை வசூலில் மிஞ்சியுள்ளது.

தற்போது, கனடாவில் ஹாலோவீன் பண்டிகையிலும் அந்த திரைப்படம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதைக் காட்டும் வீடியோ ஒன்று வைரலாகியுள்ளது.

கனடா வரை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள திரைப்படம் ஸ்த்ரீ 2 என்னும் அந்த திரைப்படத்தில், ஆண்களை மயக்கி கடத்திச்செல்லும் ஸ்திரீ என்னும் ஒரு பெண்ணின் ஆவி நடமாடும்.

ஆகவே, அந்த ஆவி வருவதைத் தவிர்ப்பதற்காக, 'பெண்ணே, நாளைக்கு வா' என எல்லா வீடுகளின் முன்னாலும் எழுதியிருப்பார்கள்.

அதை எழுதாத வீட்டுக்குள் அந்த ஆவி நுழைந்து, அந்த வீட்டிலுள்ள ஆணைக் கடத்திச் சென்றுவிடும். இன்னமும் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் அந்த திரைப்படம், கனடா வரை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கனடாவின் பிராம்ட்டன் நகரில் ஹாலோவீன் பண்டிகைக்காக ஒரு வீட்டின் முன் அலங்கரிக்கப்பட்டுள்ள பொம்மை ஒன்று, ஸ்த்ரீ 2 என்னும் திரைப்படத்தில் காட்டப்பட்டுள்ள ஆவியைப்போல வடிவமைக்கப்பட்டுள்ளது.



# இலங்கையின் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து கனடா வர்த்தகர்களுடன் கலந்துரையாடல்

நாட்டின் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து கனடாவின் வர்த்தகர்களுக்கு இலங்கை வணிக சபை பிரதிநிதிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் கனடாவில் இடம் பெற்றதாக இலங்கை வணிக சபை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வி, பசுமை விவசாயம் மற்றும் சுற்றுலா உள்ளிட்ட பல துறைகளில் முதலீடு செய்வது குறித்து இதன்போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

# கனடாவில் வேற்றுக்கிரக வாசி போல் வேடமிட்டு கொள்ளையில் ஈடுபட்ட நபர்

கனடாவின் ஹெட்மாண்டன் பகுதியில் வேற்றுக்கிரக வாசி போன்று முகமூடி அணிந்து நபர் ஒருவர் கொள்ளையில் ஈடுபட்டுள்ளார்.

கடையொன்றுக்குள் புகுந்த அந்த நபர் கடையின் காசாளரை அச்சுறுத்தி சுமார் 6000 டொலர்கள் பெறுமதியான பணம் மற்றும் பொருள்களை கொள்ளையிட்டு சென்றுள்ளார்.

குறிப்பாக சிகரெட் வகைகள், கைக்கடிகாரங்கள் போன்றவற்றை அந்த நபர் கொள்ளையிட்டு சென்றுள்ளார்.

இந்த சம்பவத்தில் வாடிக்கையாளர்களோ கடையின் பணியாளர்களோ காயமடையவில்லை என தெரிவிக்கப்படுகிறது.



துப்பாக்கி முனையில் இந்த கொள்ளை சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கொள்ளை சம்பவம் தொடர்பில் தகவல்கள் தெரிந்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

கனடாவில் வால்மார்ட் நிறுவனத்தில் இந்தியாவை சேர்ந்த 19 வயதான குர்சிம்ரன் கவுர் பணியாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில், சில நாள்களுக்கு முன் வால்மார்ட் ஸ்டோரின் பேக்கரி பிரிவில் உள்ள அடுப்பில் உயிரிழந்த நிலையில் கிடந்துள்ளார்.

அவரின் கருகிய உடலை அதே நிறுவனத்தில் கடந்த 2 ஆண்டுகளாக வேலை செய்து வரும் அவருடைய தாய் பார்த்து அலறி அழுதுள்ளார்.

இதுபற்றிய விசாரணையில், ஒரு முடிவுக்கு வர முடியவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், வால்மார்ட் நிறுவன ஊழியர்கள் சிலர் அதிர்ச்சியான தகவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் சக பெண் ஊழியர் கிறிஸ் பிரீஸி வெளியிட்ட டிக்டொக்






வீடியோவில், வால்மார்ட்டில் இந்த ஓவன் எப்படி வேலை செய்கிறது என கூறியுள்ளார்.

5 அடி ஓர் அங்குலம் உயரம் கொண்டவராக இருக்கும் அவர், தன்னால் உள்ளே செல்ல முடியுமா? என தெரியவில்லை என கூறுகிறார். ஓவனின் உள்ளே அவசரகால பூட்டு ஒன்று இருக்கும்.

இதுதவிர, ஓவனுக்குள் பணியாளர் சென்று வேலை செய்ய வேண்டிய பணிகள் என எதுவும் கிடையாது என கூறுகிறார்.

அதனை தூய்மைப்படுத்தினாலும், இல்லையென்றாலும் கூட நான் ஒருபோதும் உள்ளே சென்றது இல்லை என கூறுகிறார்.

இந்த ஓவனை பூட்ட வேண்டும் என்றால் கூட அது சுலபமல்ல. உங்கள் சக்தி எல்லாவற்றையும் பயன்படுத்தி கதவை தள்ளி, பின்னர் பூட்ட வேண்டும் என்று கூறுகிறார்.

ஓவனின் உள்புறம் ஒருவர் பூட்டி கொள்வதற்கான சாத்தியமும் இல்லை என அந்த வீடியோவில் அவர் கூறுகிறார்.

இதனால், இந்திய பெண்ணின் மரணத்தில் சந்தேகம் எழுப்பியுள்ளார். 2 ஆவது நபர் ஒருவரே, குர்சிம்ரனை ஓவனுக்குள் தூக்கி வீசியிருக்க வேண்டும் என நம்புகிறேன் என்று அவர் கூறியுள்ளார்.